1975 மார்ச் 10]

சோடியம் டைகிரோமேட் தயாரிக்கும் தொழிற்சாலை.

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையில் உள்ள சோடியம் டைகிரோமேட் (Sodium Dichromate) எனும் இரசாயனப் பொருள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு இயந்திரம், கட்டிடம் முதலியவைகளை நிறுவ அரசு எவ்வளவு முதலீடு செய்தது ?

(இ) இவ்வாலை எப்போது வேலை செய்யத் துவங்கும் ?

(உ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு இரசாயனப் பொருள் உற்பத்தியாகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) நிலம், கட்டிடம் ரூபாய் 2.11 இலட்சம். இயந்திரங்கள் ரூபாய் 2.357 இலட்சம்.

(இ) சோதனை ஓட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில இயந்திரக் கோளாறுகளை சரி செய்த பிறகே உற்பத்தியைத் துவக்க இயலும்.

(உ) தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 2 டன்.

Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam.

*145 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Government have received any representation requesting to being Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam Tirunelveli district, under the control of the Hindu Religious and Charitable Endowments (Administration) Deparment; and

(*b*) if so, the action taken thereon?

திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோவில்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோயிலை அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை. ஆனால் சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்கட்கு ஈரோடு சிவலிங்கம் என்பவரிடமிருந்து இந்தக் கோவிலையும் அதைச் சார்ந்த சத்திரம் கட்டளைகளையும் இலாகா பார்வையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளது.

(இ) சென்னை ஆணையர் இந்தக் கோரிக்கையை முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்குமாறு மதுரை துணை ஆணையரைக் கேட்டுள்ளார்.

Collection of dues to the Temples in Tamil Nadu.

*146 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(*a*) whether any representation has been received by the Government requesting that the Assistant Commissioners, Hindu Religious and Charitable Endowments (Administration) Department should be delegated powers analogous to the Sub-Registrars of Co-operative Societies, so as to enable them to recover the arrears due to the temples of Tamil Nadu and take necessary steps therefor ; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தமிழகத் திருக்கோவில்களுக்குரிய வசூல் பாக்கிகள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத் திருக்கோயில்களுக்குரிய பாக்கிகளை வசூலிக்கவும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், இந்து சமய ஆட்சித்துறை உதவி ஆணையர்களுக்கு கூட்டுறவு உதவிப் பதிவாளர்களுக்குள்ள அதிகாரங்களைப் போல வழங்கவேண்டும் என அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இதைப் பரிசீலனை செய்ததில் தற்போது உள்ள 1962 ஆம் ஆண்டின் பொது நம்பகச் சட்டத்தின் 19 வது பிரிவிலுள்ள பாதுகாப்பு போதுமென அரசு முடிவெடுத்துள்ளது.